# கலைஞரும் நானும்

85

முரசொலியில் அவரால் கட்டம் கட்டி விமர்சனம் செய்யப்பட்டவன் நான். 'பொடா' அடக்குமுறைச் சட்டத்தைக் கண்டித்து கருப்புச் சட்டை அணிந்த இளைஞர், இன்று எங்கே நிற்கிறார் எனக் கேட்டு, மீண்டும் என்னை வெள்ளைச் சட்டை போட வைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர், என தனது நினைவுகளைப் பகிர்கிறார் ம.தி.மு.க துணைப் பொதுச் செயலாளர் **மல்லை சத்யா**





# "ரொம்ப வேகமான இளைஞராச்சே!"

**மல்லை சத்யா,** துணைப் பொதுச் செயலாளர், ம.தி.மு.க

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உரைகளை, எனது கால்சட்டைப் பருவத்தில் இருந்தே கேட்டு வளர்ந்தவன். வானொலியில், செய்தித்தாள்களில் அவர் பெயர் கேட்காத நாளே இல்லை. எனது குடும்பம் திராவிட இயக்கப் பின்புலம் கொண்டது என்பதால், கலைஞரைக் கூர்ந்து கவனிக்க வேண்டிய சூழலும் அமைந்தது. திராவிட இயக்கச் சித்தாந்தத்தை முன்னெடுத்துச் செல்கின்ற மகத்தான ஆளுமையாக கலைஞர் இருந்தார் என்பதால், அவர் மீது குடும்பத்தினர் எல்லோருக்கும் இருந்த ஈர்ப்பைப் போல எனக்கும் ஈர்ப்பு ஏற்பட்டது.

சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்கள், உள்ளாட்சித் தேர்தல்களின்போது பிரச்சாரத்துக்கு வரும் தலைவரை நேரில் பார்ப்பது எங்களுக்கெல்லாம் மகிழ்ச்சி அளிக்கும். அரசியல் வாழ்க்கையைத் தொடங்கிய காலங்களில், பொதுக்கூட்டங்களில் கலைஞரின் உரையைக் கேட்பது உணர்ச்சிப்பூர்வமான அனுபவமாக இருக்கும். முதன்முதலில் மேடையின் அருகாமையில் பார்க்கும் வாய்ப்பு தலைவர் வைகோ அவர்கள் வழியாகக் கிடைத்தது. அவருடன் முதன்முதலில் மேடையைப் பகிர்ந்து கொண்டதும், மறக்க முடியாத அனுபவம்.

## தலைவர் முன் பேச்சு

அண்ணன் தா.மோ.அன்பரசன் அவர்களின் மகள் திருமணம் கலைஞர் தலைமையில், அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்குவதற்காக கூட்டணிக் கட்சியினர் அனைவரையும் அழைத்தனர். பெரிய ஆளுமைக்கு முன்னால் பேச வேண்டுமே என்கிற தயக்கத்தில், மேடைக்குக் கீழேயே இருந்தேன். அதைப் பார்த்த தளபதி அவர்கள், என்னையும் மேடைக்கு அழைத்து வாழ்த்துரை வழங்க வைத்தார். நிகழ்ச்சி முடிந்து தலைவர் புறப்படும்போது, என்னைப் பார்த்து புன்னகைத்து, 'நல்லா பேசுனய்யா' எனக் கூறிச் சென்றார். தலைவர் முன்னிலையில் நான் பேசியது சிறப்பாக இருந்தது என பலரும் வாழ்த்தினர். அது உண்மையிலேயே எனக்கு மகிழ்ச்சி அளித்தது.

2004-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நேரம், தலைவர் வைகோ 'பொடா' சட்டத்தில் கைது செய்யப்பட்டு, சிறையில் இருந்தார். தமிழ்நாடு முழுவதும் மத்திய-மாநில அரசுகளைக் கண்டித்து பொதுக்கூட்டம் நடைபெற்றது. சென்னையில், நடைபெறும் பொதுக்கூட்டத்தில் கலைஞருடன் பேச ம.தி.மு.க. சார்பில் என்னை அனுப்பினர். எங்கள் பொதுச் செயலாளர் வைகோவிடம், கலைஞருடன் மேடையில் பேசத் தயங்கிய விவரத்தைச் சொன்னேன் 'நீங்க பண்ணுவீங்க' என அவர் என்னை ஊக்கப்படுத்தி அனுப்பினார்.

அந்தப் பொதுக்கூட்டத்தில், கலைஞருக்கு முன் பேசுவதில், உள்ளூர ஒரு தயக்கம் இருந்தாலும், தலைவர் பாராட்டும்படி பேசினேன். என்னை அறியாமல் வந்த பேச்சு அது. நான் பேசும்போது வைத்த கண் வாங்காமல் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தவர், பேசி முடித்து இருக்கைக்கு வந்தபோது அழைத்து "வைகோ வராத குறையைப் போக்கிட்டய்யா" என வாழ்த்தினார். என் வாழ்க்கையில் பூரணத்துவம் அடைந்ததுபோல மகிழ்ந்தேன்.

பிறகு அவரது உரையிலும், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வராத குறையை, தம்பி மாமல்லை சத்யா போக்கினார் எனக் குறிப்பிட்டார். 'மல்லை' என்பதை 'மாமல்லை' என்று கூறியது, அவரது நுணுக்க மான பார்வையாக இருந்தது.

## எழுதுகோல் தமிழன்

அதன்பின்னர், அவருடன் இரண்டு மேடைகளில் பேசினேன். "ஐம்பது வயதைக் கடந்து விட்டாலே, ஊன்றுகோல் தேவைப்படும் இக்காலகட்டத்தில் எழுதுகோலை மட்டுமே ஊன்றி, தமிழகத்தை வலம் வரும் உறங்காத் தமிழ்".

"போரிடும் வலிமை, புறமுதுகு காட்டாத வீரம் இவன் சாவதற்கு அஞ்சமாட்டான், ஆனால், காரணம் இல்லாமல் சாகமாட்டான்" என்ற புதிய புறநானூற்று வரிகளைப் பிரசவித்து, தமிழ்ச் சொல்லுக்கே பேறு காலம் பார்த்திட்ட சூனிய தமிழகத்தின் சூரியோதயம் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களே" என்று நான் அவரைப் பற்றி பேசுகையில், அவர் புன்னகை ரசிக்கும்படி இருக்கும். **'வான்புகழ் வள்ளுவம் நூல்'** வெளியீட்டின்போது, அவர் கையெழுத்திட்ட புத்தகத்தை வழங்கி வாழ்த்தினார்.

**"அப்பா, மல்லை சத்யா வந்திருக்கிறார்" என்றபோது தலைவர் என்னைப் பார்த்து சிரித்தார். அந்தப் புன்னகையை என் வாழ்நாள் பொக்கிஷமாகக் கருதுகிறேன்.**

2002-ஆம் ஆண்டில், எங்கள் தலைவர் வைகோ 'பொடா' சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். ஏறக்குறைய ஒன்றரை ஆண்டுகள் வேலூர் சிறையில் இருந்தார். அவர் கைது செய்யப் பட்டதைக் கண்டித்து, மக்களிடம் நீதிகேட்டு நடைப்பயணங்கள் செய்தோம். தலைவர் கலைஞரும் எங்கள் செயலாளரைச் சிறையில் சென்று சந்தித்திருந்தார்.

அப்போது, மக்களிடம் கையெழுத்து இயக்கம் நடத்தலாம் எனத் திட்டமிட்டு, ஒரு கோடி கையெழுத்து வாங்கி ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் அனுப்பலாம் என முடிவு செய்தோம். வேலூர் சிறையில் எங்கள் பொதுச் செயலாளரைச் சந்தித்துவிட்டு கட்சியின் அவைத்தலைவர் எல்.ஜி. அவர்கள் வெளியே வந்தார். "ஒரு கோடி கையெழுத்து என அறிவிச்சிருக்கீங்களே நமக்கு வாய்ப்பிருக்கா? என பொதுச் செயலாளர் கேட்டாருய்யா" என வருத்தத்துடன் அவர் கூறினார்.

அப்போது நான் இளைஞர் அணிச் செயலாளராக இருந்தேன். "அண்ணே நான் ஒரு யோசனை சொல்றேன், கேட்டுக்குவீங்களா?" எனக் கேட்டு, முதல் கையெழுத்து உலகத் தமிழர்கள் அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும் கையெழுத்தாக இருக்க வேண்டும். மக்கள் தானாக வந்து கையெழுத்துப் போட வேண்டும் என்றால், அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரே தலைவர் டாக்டர் கலைஞர்தான்" என்றேன். அவர் எனது யோசனையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு, அன்று மாலையே கலைஞரைச் சந்திக்க நேரம் வாங்கினார்.

கலைஞர் எங்களை வரவேற்றவிதமே, அக்கறை கொண்டதாக இருந்தது. எல்.ஜி. அவர்கள் என்னை அறிமுகப்படுத்தினார். "தெரியும்யா, காஞ்சிபுரம் சேர்மனா இருந்தவரு, 1999-இல் **மாநில சுயாட்சி மாநாடு** நடத்தினாரு, ரொம்ப வேகமான இளைஞர்யா" என என்னைக் குறித்து அவர் அப்டேட்டில் இருந்தார். இதெல்லாம்தான் முத்தமிழறிஞர் அவர்களை உயரத்தில் வைத்துப் பார்க்க வைக்கிறது.

## அடைமொழி எங்கே?

என்ன அவசர சந்திப்பு என, விவரங்களையும் கேட்டுக் கொண்டு, கையெழுத்துப் படிவத்தை வாங்கிப் படித்தார். அதில், 'வைகோ உள்ளிட்டவர்களின் விடுதலைக்காக' என இருந்ததைப் பார்த்துவிட்டு, "என்ன எல்.ஜி, வெறும் வைகோ என்று போட்டிருக்கீங்க, அவருக்கு என்று ஒரு அடையாளம் இருக்குல்ல, அதைப் போடல, 'புரட்சிப் புயல்' இல்லன்னா ம.தி.மு.க. பொதுச் செயலாளர் என அடையாளம் போடணும்ல" என்றார். "உங்க தம்பிக்கு அதெல்லாம் பிடிக்கலைங்கண்ணா" என எல்.ஜி. சமாளித்தார். "அவருக்குப் பிடிக்கலைன்னாலும் தொண்டர்களைத் திருப்திப்படுத்த தலைவர்களுக்கு அந்த அடையாளங்களைக் கொடுக்கணும்ய்யா" என எங்களுக்கு விளக்கினார். அந்த எண்ணத்தால்தான் அவர் தமிழர்களின் தலைவராக உயர்ந்து நிற்கிறார். அன்று, அவர் முதல் கையெழுத்துப்போட்டு தொடங்கி வைத்தார். ஒரு கோடியே பத்து லட்சம் கையெழுத்து வாங்கினோம். அவர் தொட்டது துலங்கும் என்பதற்கு அது ஒரு உதாரணம்.

அவரது இறுதிக் காலத்தில், மருத்துவமனையில் சேர்ப்பதற்கு பத்து பதினைந்து நாட்களுக்கு முன்னர், எங்கள் பொதுச்செயலாளர் வைகோ அவர்களுடன் பார்ப்பதற்குச் சென்றிருந்தோம். தளபதி அவர்கள் எங்கள் பொதுச்செயலாளரை மாடிக்கு அழைத்துச் சென்ற சிறிது நேரத்தில், என்னையும் அழைத்தனர். கம்பீரமான அந்த ஆளுமையை உடல்நலம் சரியில்லாமல் காண்கையில், என் நிலையில் என்னால் இருக்க முடியவில்லை. தளபதி அவர்கள், "அப்பா, மல்லை சத்யா வந்திருக்கிறார்" என்றபோது தலைவர் என்னைப் பார்த்து சிரித்தார். அந்தப் புன்னகையை என் வாழ்நாள் பொக்கிஷமாகக் கருதுகிறேன்.

பொதுவாழ்க்கையில், எல்லா உயரங்களையும் அடைந்த ஓர் உலக ஆளுமையின் நினைவடுக்குகளில் நானும் இருந்திருக்கிறேன் என்கிறபோது, அதைவிட எனக்கு வேறு பெருமை இருக்க முடியாது.

**தொகுப்பு :**
**நீரை மகேந்திரன்**

....பகிர்வார்கள்

## வகுப்பறையில் நிகழும் மாற்றம்!

'நான் முதல்வன்', 'புதுமைப்பெண்' என புதிய புதிய திட்டங்கள் மூலம் மாணவர்கள் நலனில் தமிழ்நாடு அரசு காட்டி வரும் அக்கறை, மாணவர்களின் சிந்தனையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதை உதயலட்சுமி என்கிற ஆசிரியை தனது முகநூலில் பதிவிட்டுள்ளார். 'நான் முதல்வன் தந்துள்ள மாற்றம்' என்கிற தலைப்பிலான அவரது பதிவு இது.

"பள்ளி திறந்த முதல் நாளில் வழக்கமான கேள்விகளைப் பிள்ளைகளிடம் கேட்டிருந்தேன். 'என்ன படிக்க விரும்புகிறீர்கள்? என்ன ஆக விரும்புகிறீர்கள்?' என்று பிள்ளைகள் சொன்னதைக் குறித்து வைத்திருந்தேன்.

தற்போது அரசுப் பள்ளிகளில் வழங்கப்படும் எதிர்காலத்துக்கான வழிகாட்டல் (CAREER GUIDANCE) பயிற்சிகளில் மாணவன் தன் மனநிலையை உயர்த்திக் கொள்கிறானா, பயிற்சிகள் என்ன மாற்றத்தைத் தருகிறது என்பதை அறிந்துகொள்ள, பள்ளி திறந்து மூன்று மாதம் முடிந்த நிலையில், நேற்று அதே பிள்ளைகளிடம் அதே கேள்விகளைக் கேட்டேன்.

சில பிள்ளைகள் மட்டும் முதலில் சொன்னதையே சொன்னார்கள். பலர், தற்போது கிடைத்த வழிகாட்டல்களால், வேறு வேறு துறை சார்ந்த படிப்புகளைப் படிக்க விரும்புவதாகச் சொன்னார்கள். ஒரு மாணவன், 'நான் நீதிபதி ஆக விரும்புகிறேன்' என்றான்.

'ஏன்?' என்று கேட்டதற்கு, 'நான் மாற்றங்களைக் கொண்டுவர விரும்புகிறேன். யாரிடமும் பணிந்து வேலை செய்ய விருப்பமில்லை, நான் அதிகாரத்திற்குச் செல்ல வேண்டும்' என்றான்.

கல்வி தரும் மாற்றம் இதுதான். இதுதான் சமூகம் முன்னேற்றமடையத் தேவைப்படுகிறது. ஓர் அரசு இதைத்தான் விரும்ப வேண்டும், செயலாக்க வேண்டும். பெற்றோரும் ஆசிரியரும் மகிழ்வது இம்மாதிரியான மாற்றங்களைக் கொண்டுதான்" என்கிறார்.

'திராவிட மாடல்' உருவாக்க விரும்பிய மாற்றம் வகுப்பறைகளிலும் நிகழ்கிறது என்பதற்கான சான்றுதான் மேற்கண்ட பதிவு.

## ஃப்ளாஷ்பேக்



### 'கதிரவன்' எனப் பெயர் சூட்டிய சூரியன்!



ஈரோடு இளையகோபால்

1987-ஆம் ஆண்டு ஈரோடு, வ.உ.சி. பூங்கா மைதானத்தில், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. விழாமேடையில், எனது மகனுக்கு 'கதிரவன்' என்று பெயர் சூட்டினார் தலைவர். இந்தப் படத்தில் நானும் என் இணையர் இ.குமுதவேணியும் உள்ளோம். நிகழ்வில், கழக முன்னோடிகள் என்.கே.கே.பெரியசாமி, சி.டி.தண்டபாணி, எவரெஸ்ட் மு.கணேசன், தாரைமணியன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

**– ஈரோடு இளையகோபால்,**
**தலைமைக் கழகச் சொற்பொழிவாளர்,**
**மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர், ஈரோடு தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### மூன்று முறை பிரச்சாரம்!

1957-ஆம் ஆண்டு, கழகம் முதன்முதலில் தேர்தலில் நின்றபோது கலைவாணர் பல தொகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டார். குளித்தலையில் போட்டியிட்ட கலைஞர், கலைவாணரைப் பிரச்சாரம் செய்ய அழைத்தார். கலைவாணர் மூன்று முறை வந்து கலைஞருக்காகப் பிரச்சாரம் செய்தார். சேலம் ஊராட்சி மன்றத்தில் அண்ணாவின் படத்தைத் திறந்து வைத்துப் பேசியதுதான், கலைவாணர் கலந்துகொண்ட கடைசி நிகழ்ச்சி.

# திராவிடத்தால் வாழ்கிறோம்

587

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131